# University of Jaffna



## Professor
## Chellathurai Sivagnanasundram

Memorial Lecture – 2019

on

**"தமிழர்களின் தொல்தொடர்பியல் மரபுகளும் சம கால தொடர்பியல் சிக்கல்களும்"**

by

**கோபாலன் இரவீந்திரன்**

பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
இதழியல் மற்றும் தொடர்பியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

on

**Thursday 4th April 2019**

**3.00 p.m.**

at

**Kailasapathy Auditorium**
**University of Jaffna.**

# University of Jaffna

**Professor**

**Chellathurai Sivagnanasundram**

Memorial Lecture – 2019

on

**"தமிழர்களின் தொல்தொடர்பியல் மரபுகளும் சம கால தொடர்பியல் சிக்கல்களும்"**

by


**கோபாலன் இரவீந்திரன்**

பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

இதழியல் மற்றும் தொடர்பியல் துறை

சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை


on

**Thursday 4th April 2019**

**3.00 p.m.**

at

**Kailasapathy Auditorium**

**University of Jaffna.**



# Professor Chellathurai Sivagnanasundram

# Message from the Vice Chancellor

Late Professor Chellathurai Sivagnanasundram has contributed immensely to the university of Jaffna and in particular to the Faculty of Medicine. He has contributed to the modern Tamil literature and well known as "Nanthi" among the Tamil Scholars. His contribution to the Medical Curriculum of the Faculty of Medicine especially to the Department of Community and Family Medicine cannot be forgotten by the Faculty of Medicine.

We are happy to have Prof (Dr) Gopalan Ravindran delivering the Memorial Lecture this year.

I wish to thank Professor Ravindran for accepting to deliver the Memorial Lecture and wish him for every success in his endeavors to bring out the issues in his field.

**Prof.G.Mikunthan**
**Actg. Vice Chancellor**
**01.04.2019**

## தமிழர்களின் தொல் தொடர்பியல் மரபுகளும் சம கால தொடர்பியல் சிக்கல்களும்

கோபாலன் இரவீந்திரன்
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
இதழியல் மற்றும் தொடர்பியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை
gopalanravindran@gmail.com

பேராசிரியர் சிவஞானசுந்தரம் நினைவுப் பேருரை யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை. 21 பங்குனி மாதம். திருவள்ளுவர் ஆண்டு 2049. (எப்ரல் மாதம் 04 2019)

வணக்கம்.

எம்மை இந்த அருமையான வாளகத்திற்கு சொற்பொழிவாற்ற அழைத்த யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் சீரிய பேராசிரியர் சிவஞானசுந்தரம் நினைவுப் பேருரைக் குழுவினருக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும், மாணவர்களுக்கும், இங்கு கூடியிருக்கும் தோழர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளும், நன்றிகளும்.

கடந்த 30 ஆண்டுகளாக, தமிழகத்தில் தொடர்ந்து நிலைப்பெற்று வரும் தொடர்பியல் சிக்கல்களை, முக்கியமாக ஊடக தொடர்பியல் சிக்கல்களை கூர்ந்து கவனித்து வரும் தருணங்களில் எனது பார்வை மாற்றங்கள் சங்க காலத்தை தொட்டு, அதன் பின் எழுந்த பல்லவர், பிற்கால சோழர், சேரர், பாண்டிய காலங்களை உள்ளார்ந்து ஆய்ந்து, அதன் பின் எழுந்த விஜய நகர, நாயக்கர், ஆங்கிலேயர் காலங்களை உள்ளடக்கி உருமாறின. இந்த உருமாற்றங்கள், எனது பார்வை மாற்றங்கள் சார்ந்தவையாக இருந்தாலும், அவை தமிழர்களின் தொல் தொடர்பியல் மரபுகள் எவ்வாறு அன்று குடிக் கொண்டன, அந்த மரபுகளின் கருத்தியல்/தத்துவ காரணிகள் எவ்வாறு மக்கள் தொடர்பியலையும், அரச தொடர்பியலையும் இணைத்தன, வளப்படுத்தின என்பனவற்றை எமக்கு புலப்படுத்தின.

1980ல் நான் சென்னைப் பல்கலைக்கழக இதழியல் மற்றும் தொடர்பியல் துறையில் முதலில் முதுகலை மாணவனாகவும், பின்னர் முனைவர் பட்ட மாணவராகவும் செயல்பட்ட காலத்தில் எமக்கு இந்த பார்வை மாற்றங்கள் வாய்க்காதது எனது வாழ் நாளின் முக்கியமான காலமான இளமைக் காலத்தில் நான் இழந்ததை சுட்டுவதாக பார்க்கிறேன். அன்று இந்த பார்வை மாற்றங்கள் வாய்க்காததற்கு காரணம் எமக்கு கிட்டிய நவீன காலனிய பார்வையில் எழுந்த பாடத்திட்டமும், அதை மாற்ற விரும்பாத, கேள்வி கேட்காத, நம்பி இயங்கிய பல்கலைக்கழக ஆசிரியர்களும் தான்.

தமிழ் நாட்டில் கடைக்கோடி மாவட்டங்களில் ஒன்றான திருநெல்வேலியில் 1990களின் தொடக்க காலத்தில் உருவான மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 1995-2008 கால கட்டத்தில் மக்களை தேடி பல்கலைக்கழக செயல்பாடுகள் பயணிக்க வேண்டும் என்ற கருத்தியல் என்னுள் விதைக்கபட்ட விதம் எனக்கு தொல் தமிழர்களின் தொடர்பியல் மரபுகள் மற்றும் சம கால தொடர்பியல் சிக்கல்களை பற்றிய விழிப்புணர்வை தந்தது எனலாம். மேலும், அது காறும் எனது தந்தை மா.கோபாலனின் பெரியாரிய, மக்களுக்கான தமிழ் மொழி, மக்களுக்கான சித்தாந்தங்கள் பற்றிய எழுத்துகளும், செயல்பாடுகளும், பேச்சுகளும் எனக்கு புலப்படுத்தாத பார்வை மாற்றங்கள் முக்கியமானவையாகப்பட்டன.

அந்த பல்கலைக்கழகத்தின் இரு மேனாள் துணை வேந்தர்கள், பேரா. வசந்தி தேவி மற்றும் பேரா. அறவாணன் மக்களுக்கான செயல்பாடுகளிலும், கருத்தியல்களிலும் தீவிரமாக நாட்டம் காட்டியவர்கள். பல்கலைக் கழகத்தின் தொடர்பியல் துறை வெகு மக்களுக்காக, மக்கள் வெளியில், அவர்களது வாழ்வியல் தளங்களில் நிலைத்த, செழுமையான மாற்றங்களை கொண்டு வர இயங்க வேண்டும். அன்றாட வகுப்புகள் தொடர்பியல் துறைகளில் தேவையற்றவை. அவை மக்களிடமிருந்து அத்துறைகளை பிரிக்கும் வேலையை செய்பவை என்று தொடர்ந்து எமக்கு நினைவூட்டியவர் பேரா.வசந்தி தேவி. நானும், ஆசிரிய தோழர்களும் மாணவ தோழர்களும் வகுப்பறையில் இருந்தால், அதை அவர் பார்த்தால், கோபம் கொள்வார். "இரவீந்திரன், இந்த வகுப்பறையில் செயல்படாதீர்கள். வாளகத்திற்கு வெளியே இருக்கும் பரந்து, விரிந்த மக்கள் வெளிதான் உண்மையான வகுப்பு அறை. அங்கு நுழையுங்கள் உங்கள் மாணவர்களுடன். அங்கு பேசுங்கள், செயலாற்றுங்கள், அங்கு கருத்தரங்குகளை நடத்துங்கள்" என்பார். அவர் துணை வேந்தராக இருந்த ஆறு ஆண்டு காலத்தில் தமிழகத்தின் முக்கியமான பகுதிகளுக்கு மாணவர்களுடன் பயணித்தோம். மக்களிடமிருந்து தொடர்பியல் சிக்கல்கள் பிறப்பதில்லை, செயற்கையான தொடர்பியல் தளங்களாக இயங்கும் ஊடகத் தளங்கள்தான் இந்த சிக்கல்களை உருவாக்குகின்றன என்ற புரிதல் அப்பொழுது எற்பட்டது.

அக்கால கட்டத்தில், எமது துறை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சொல்லாமல் சொன்னது: "நாங்கள் கற்பிப்பதில்லை, ஆனால் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்". அந்த காலக் கட்டத்தில் தான், மக்களுக்கான, அவர்களின் வாழ்வியல் சார்ந்த தொடர்பியல் தளங்கள் எவ்வாறு அண்மைக்காலங்களில் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டன என்பது புலப்பட்டது. அத்தகைய அழித்தொழிப்பு வேலையை செய்பவை நவீன தொடர்பியல் தொழில் நூட்பங்கள் சார்ந்து இயங்கும் வெகு மக்கள் ஊடகங்களாக இருந்தாலும், அவற்றின் கட்டமைப்புகளை உருவாக்கி,

இயக்கி, நிலைத்திருக்க செய்யும் பெரும் சந்தை காரணிகளாக இருந்தாலும், ஏமாற்றப்படும் மக்களும், தாங்கள் ஏமாற்றப்படுகிறோம் என்பதை உணராமல் செயல்படும் அவர்களின் கருத்தியலும் தான் என்பதை புரிந்துக் கொண்டேன். மக்கள் இருக்கும் இடங்களுக்கு தொடர்பியல்/இதழியல் வகுப்பறைகளை இடம் பெயரச் செய்த வேளையில், சமகால தொடர்பியல் சிக்கல்களுக்கு காரணங்கள் பலவாக இருந்தாலும், தொல்தொடர்பியல் மரபுகளிலிருந்து நாம் அந்நியப்பட்டு போன தன்மை மிக முக்கியமானதாகப்பட்டது. இந்த தன்மை தொடர்பியல் தளங்களை பண்பாடற்ற தளங்களாக மாற்ற முயல்வது மட்டுமல்ல, அவற்றை முழுமையாக, மக்களின் ஆதரவோடு மாற்றுவது தான் கவனிக்கத் தக்கது. காரல் மார்க்ஸ் மற்றும் புதிய மார்க்சியவாதிகளான, கிராம்சி, ஹார்கைமர் மற்றும் அடர்னோ அவர்களின் கருத்தியல்கள் எமது பயணங்களை கருத்தியல்சார் பயணங்களாக மாற்றின. முக்கியமாக மக்ஸ் ஹார்கைமர் மற்றும் தியோடர் அடர்னோ அவர்களின் Dialectic of Enlightenment (1944,1993) நூலின் முக்கியமான அங்கமான "Culture Industry" பற்றிய கருத்தியல் தமிழர்களின் தொல் தொடர்பியல் மரபுகளையும் சம கால தொடர்பியல் சிக்கல்களையும் இணைத்து சிந்திக்க வைத்தது.

தமிழர்களின் தொல் தொடர்பியல் மரபுகள் யாவை? என்பது சிக்கலான கேள்வி தான். தமிழகத்தில் இதுகாறும் நடந்த தொல்லியல் ஆய்வுகளிலும், சங்க கால ஆய்வுகளிலும், நமது பொது வெளியில் இன்றும், எங்கும் வியாபித்திருக்கும் கல்வெட்டுகள், சிற்பங்கள், நடு கற்கள், சமண பள்ளிகளின் எச்சங்கள், பாறை ஓவியங்கள், குகை ஓவியங்கள் மற்றும் பல்லவர் காலம் தொட்டு உருவான பெரும் கற்றாளிகளிலும் தமிழர்களின் தொல் தொடர்பியல் மரபுகளின் தன்மைகளையும், ஊடகங்களையும், வடிவங்களையும், செயல்பாடுகளையும், கருத்தியல்களையும் நாம் பார்க்கலாம். நான் புரிந்துக் கொண்ட அளவில், தமிழர்களின் தொல் தொடர்பியல் மரபுகளின் முக்கியமான தன்மை காலந்தோறும் மாறுப்பட்டு வந்ததை பார்க்கலாம். பாறை மற்றும் குகை ஓவியங்களை குழு தொடர்பாடல் ஊடகங்களாக பயன்படுத்திய தொல் தமிழர்கள், எழுத்தறிவற்றவர்களாக, ஆனால் காட்சி எழுத்தறிவில் தேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதை பார்க்க முடிகிறது. அவர்களின் காட்சி எழுத்தறிவு, குழு தொடர்பாடலை மையப்படுத்தி எழுந்த ஒன்று. சங்க கால தொடர்பாடல் மரபு எழுத்தறிவு காலத்திற்கு சொந்தமானது, ஆனால் பாறை மற்றும் குகை ஓவியக் கால குழு தொடர்பாடல் மரபை கருத்தியல்கள் சார்ந்து வளர்த்தெடுத்த ஒன்று. இக்கருத்தியல்களில் முக்கியமானவை அறம், பொருள், இன்பம் சார்ந்த கருத்தியல் வாழ்வியல் தொடர்பியல் நெறியின் மைய அங்கமாக அனைத்து தளங்களிலும், உறவுகளிலும் தெரிப்பதை பார்க்க முடிகிறது. எற்றத்தாழ்வை முன்னிலைப்படுத்தாத வாழ்வியல் தொடர்பியல் நெறி

இயற்கையின் தன்மைகளை முழுமையாக அகவயப்படுத்திய முறைமைகள் ஆய்வுக்குரியது. சங்க காலத்திற்கு பிந்தைய "சிலப்பதிகார" காலத்தில் அரசர்கள், பாணர்கள், வணிகர்கள், சமய வாதிகள் மற்றும் வெகு மக்கள் தங்களுக்கான கடமைகளிலிருந்தும், செயல்பாடுகளிலும் வழுவுகளை உருவாக்கும் பாங்கு தொல் தமிழர்களின் தொடர்பியல் மரபு தனது முதல் பெரிய மாற்றத்தை சந்தித்ததை சுட்டுவது. "திருக்குறளின்" உருவாக்கமும், "சிலப்பதிகாரத்தின்" உருவாக்கமும் அன்றைய தமிழ் சமுகத்தில் பேரளவில் எழுந்த சிக்கல்களின் வெளிப்பாடுகளாகப் பார்க்கப்பட வேண்டும். மேலும், அவை முந்தைய குழுத் தொடர்பியல் தளங்களும், அறம் சார் மற்றும் இயற்கை சார் தொடர்பியல் மரபுகளும் தடம் மாறி போனதை சுட்டிக் காட்டி தொடர்பியல் விழிப்பணர்வை எற்படுத்திய தளங்களாகவும் பார்க்கப்பட வேண்டும்.

அக்காலம் தொட்டு வேர்க் கொண்ட குடி மக்களுக்கும், சமய வாதிகளுக்கும், அரசமைப்பிற்குமான சமுக, பொருளாதார, பண்பாட்டு இடைவெளி பெரும் தொடர்பியல் இடைவெளியாகவும், மக்கள் மனதில் தோன்றும் சிக்கல்களை மறக்கடித்து, அவர்களை அவர்களின் தொல் தொடர்பியல் மரபுகளிலிருந்து அன்னியப்படுத்தி, ஏமாற்றும் வேலையை செய்து வருவது கண்கூடு. அதனால் தான், 19வது நூற்றாண்டு வரை, "திருக்குறள்" ஏறக்குறைய 2000 ஆண்டு காலமாக, தமிழ் மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தப்பட்டும், மறைக்கப்பட்டும் வந்திருக்கிறது. இத்தகைய அன்னியப்படுத்துதல் அறம் வழுவி, அறம் மறக்கடிக்கப்பட்டு, மக்கள் தன்னிலை மறந்து, பகுத்தறிவு இழந்து, வைதீகம் காட்டிய பாதையில் பீடு போட்டு நடந்த காலத்தில் அதற்கேப்ப தொல் தொடர்பியல் மரபுகளும் வழுவி, மறுவி, அன்னியப்பட்டு ஜேம்ஸ் காரி (1989) சுட்டிக்காட்டிய பண்பாடற்ற பண்பாட்டு தொடர்பியல் தளங்களுக்கு சொந்தமாகி போனது கண்கூடு.

இந்த நிலைக்கு எதிராக அக்காலத்தில் உரத்து ஒலித்தது தான் தமிழ் சித்தர்களின் கலகக் குரல். இந்த குரல் மாற்று தொடர்பியல் மரபுகளை பொது வெளியில் கட்டமைத்தது எனலாம். நிறுவனமயமான, அரசமைப்பு மற்றும் சமய வாதிகளிடம் அடிமைப்பட்டுப் போன பொது புத்தியும், பொது மக்களும் தடம் மாறி, தன்னிலை மறந்து, பகுத்தறிவு இழந்து வைதீகத்திடம் குடிக்கொண்டதை சாடியது இவர்களின் புதிய தொடர்பியல் எழுச்சிகள் எனலாம். சாதீய, சமய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்றும் அன்னியப்படலிருந்து மக்கள் விடுபட வேண்டும் என்று குரல் எழுப்பியவர்கள் தமிழ் சித்தர்களும் அவர்களினால் உந்தப்பட்டு பொது வெளியில் சமூக தொடர்பியல் போராட்டங்களை தனி நபர்களாக கையகப்படுத்தியவர்களும். அவர்களில் முக்கியமானவர்கள் பலர் இருப்பினும், "பாய்ச்சலூர் பதிகத்தின்" படைப்பாளியான மிகப் பெரிய தமிழ் பெண் ஆளுமை,

உத்தர நல்லூர் நங்கை அதி முக்கியமானவர். அவரது பாடல்கள் அவரது கிராமத்தின் பொது வெளியில் அரங்கேறிய தொடர்பாடல் சாகசம் எனலாம். மக்களை எவ்வாறு வைதீகம் கருத்தியல் மயக்கத்தில் வைத்திருக்கிறது, இதில் பெண்களின், கடைத்தட்டு பெண்களின் நிலை என்ன என்பதை புரிய வைக்கவும், அடிமைத் தளைகளிலிருந்து அவர்களை மீட்கவும் எழுந்த குரல் தான். உத்தர நல்லூர் நங்கையின் குரல் எனலாம்.

திருவள்ளுவரும் "திருக்குறளும் " நம்மிடம் இருந்து மறைக்கப்பட்டது போல,
"பாய்ச்சலூர் பதிகமும்" அதன் படைப்பாளி உத்தர நல்லூர் நங்கையும் மறைக்கப்பட்டனர் எனலாம். பல்வேறு கால நிலைகளில், பல்வேறு தமிழ் ஆளுமைகளால் இயற்றப்பட்டு தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் வெளி வந்துள்ளன. இவற்றில் ஒன்றிரண்டு நூல்களிம் மட்டும் பாய்ச்சலும் பதிகத்தை என்னால் காண முடிந்தது வேதனை அளிக்கும் விடயம்.

இன்றைய தொடர்பியல் சிக்கல்கள் இன்று தோன்றியவை அல்ல. அன்று தோன்றியவை எனலாம். அன்று என்பது என்று என கேள்வியை நீங்கள் எழுப்பலாம். அன்று ஒன்றன்று. பல வரலாற்றுக் காலங்களுக்கு சொந்தமான கால வெடிப்புகள் மட்டுமன்றி அவை. பூக்கோவின் (Garland, 2014) பார்வையில். தொடரற்ற தொடர் நிலைகள் தான் "பல அன்றுகள்" என்பேன். தமிழர்களின் தொடர்பியல் மரபுகளின் தொடரற்ற தொடர் நிலைகள் தொடர்பியல் நிலைகளாகவும் பார்க்கப்பட வேண்டும். மக்களுக்கு எதிரான செயல்பாடுகள் அன்றும், இன்றும் நிறுவனமயமாக்கப்பட்ட அரசமைப்பு சார்ந்த, வைதீக வயப்பட்ட, பண்பாட்டு மயக்கங்களை உற்பத்திச் செய்யும் தளங்களால் தான் இயக்கம் பெற்றன/பெறுகின்றன என்பது எனது கருத்து. இன்று இவற்றை இயக்கும் சூழல்கள் புதிய தாராளமயமாக்கல் மற்றும் உலக மயமாக்கல் சார்ந்து வலுப்பெற்றாலும், தொல் தொடர்பியல் மரபுகளை வீழ்த்திய காரணிகளின் வரலாற்று தடங்கள் இன்றும் அழியவில்லை என்பது உண்மை.

நமது தொடர்பியல் மரபுகளை தொடர்பியல் மரபுகளாக இனம் காண முடியாமல் திணறுபவர்களுக்கு. எவை தொடர்பியல் தளங்கள்? எவை ஊடக தளங்கள்? என்பதற்கான பதில்கள் தட்டையாக இருப்பதற்கு காரணம், தொடர்பியல் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வாய்க்கும்/வாய்த்த பாடத்திட்டங்களும், கருத்தாக்கங்களும், கோட்பாடுகளும் (வட அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட) தான். இவ்வேளையில், மக்கள் இன்றளவும், தொல் தொடர்பியல் மரபுகளின் எச்சங்களை தங்களது வெளிகளில் புழக்கத்தில் வைத்திருக்கிறார்கள் என்பதும் எமக்கு தெளிவாக புலப்படுகிறது. இன்றைய தொடர்பியல் சிக்கல்களுக்கு காரணம் மக்களின்

வாழ்வியலில் தோற்றுவிக்கப்படும் வெற்றிடங்களும், இடைவெளிகளும், வெடிப்புகளும், தொடர் முரண் நிலைகளும், கருத்தியல் மாயைகளும் தான். இவற்றிற்கு காரணங்கள் பலவாக இருந்தாலும், முக்கியமான காரணம் பண்பாடற்ற பண்பாடுகள் தொடர்பியல் தளங்களாக வியாபிப்பது தான்.

வட அமெரிக்காவின் தொடர்பியல் தாக்கங்களை உள்வாங்கிக் கொண்டு பண்பாடு சார்ந்த தொடர்பியல் கருத்தாக்கங்களை வளர்த்தெடுத்தவர்களில் முக்கியமானவர், ஜேம்ஸ் காரி (1989). தொல் தமிழர்களின் தொடர்பியல் மரபுகளின் தன்மை இன்று மறக்கடிக்கப்பட்டதற்கு காரணம், தமிழர்களின் தொடர்பியல் ஊடகங்கள் பரப்புரை வேலையை செய்யும் தன்மைதான். சடங்கு பார்வையிலான தொடர்பியல் பங்களிப்பை இவை செய்ய மறுக்கும் தன்மை முதல் தன்மையின் மற்றொரு முகம். வாழ்வியலில் நேர்மை, தொடர்பியலில் நேர்மையை பயக்கும். வாழ்வியலில் நேர்மை, இயற்கையால் வாய்ப்பதும், பண்பாட்டால் வாய்ப்பதும் ஆகும். தொழில் நுட்பங்கள் சார் தொடர்பியல், பரப்புரை தொடர்பியலை சாத்தியப்படுத்தும், மக்களை இணைக்காது. சடங்கு தொடர்பியலால் மக்களை இணைக்கவும், வாழ்வியலில் இயற்கையையும், பண்பாட்டையும் நேர்த்தியாகவும், முன் மாதிரியற்ற தனித்துவ அளவிலும் கலந்து உறவாட வைக்க உதவும்.

சம கால தொடர்பியல் தளங்கள் சமுக ஊடகங்களால் கையகப்படுத்தப்படுவதாக மதிப்பீடு செய்யப்படுகிறது அவ்வூடகங்களை பயன்படுத்துபவர்களாளும், அவற்றை பயன்படுத்தமால் விமர்சனம் செய்பவர்களாலும். இதில் உண்மை இருப்பதாக எனக்கு தெரியவில்லை, மாறு நிலை கூராய்வு

பார்வையில் எவை ஊடகங்கள் என்ற கேள்வியை தொடர்ந்து எழுப்புபவன் என்ற அளவில்.

ஒவ்வொரு காலத்திற்கும் வாய்க்கும் ஊடகங்கள், அடுத்த காலத்திற்கு வாய்க்காது. சங்க கால ஊடகங்கள் இன்று இல்லை. பல்லவர் கால ஊடகங்கள், சோழர் கால, பாண்டியர் கால, விசய நகர, நாயக்கர் கால ஊடகங்கள் இன்று இல்லை. அவற்றின் பொருள் தளங்கள் இருக்கின்றன. அவற்றின் பொருளகங்கள் இல்லை. பொருள் தளங்கள் பொருளகங்கள் இல்லா கருத்தியல்/தொடர்பியல் வெற்றிடங்கள். அவை உருவாக்கப்பட்ட காலத்தில், உருவாக்குதலில் பங்களிப்பு செய்த காரணிகளால் (சமுக, மொழி, அரசியல், சமய, பண்பாடு), அவற்றினால் தொடர்புபடுத்தப்படுத்தப்பட்ட மாந்தர்களால் அவை வெற்றிடங்கள் அல்ல. இன்று மற்றொரு கால அளவில், நமக்கு அவை சுற்றுலா தளங்கள், வழிப்பாட்டு தளங்கள். மக்கள் தொடர்பியல் தளங்கள் அல்ல. சமுக ஊடக/தொடர்பியல் தளங்கள் அல்ல. நமது பண்டைய கட்டட கலையில் விளைந்த முற்றங்களும், திண்ணைகளும்

அவ்வாறே. அன்றைய கூட்டு குடும்ப சூழலில், வழிப்போக்கர்களை விருந்தினர்களாக வரித்த காலத்தில், திண்ணையும், முற்றமும் சமுக ஊடக தொடர்பியல் பங்களிப்பை செய்த முக்கியமான தளங்கள். திண்ணைக்கும், தெருவிற்கும் இருந்த உறவு, முற்றத்தில் இருந்த மாந்தர்களை திண்ணையில் வந்து தங்கிய வழிப்போக்கர்களுக்கு உணவளிக்க, நீரளிக்க வெளியே அழைத்தது.

இன்றைய சமூக ஊடகங்களுக்கும், அன்றைய சமூக ஊடகங்களுக்கும் உள்ள வேறுபாடு இதனால் விளங்கும். இன்றைய சமுக ஊடகங்கள், நமக்கு நாம் பார்க்காத/பார்த்த இணைய வழிப்போக்கர்களை நமக்கு நண்பர்களாக் சுட்டுகிறது. நாம் அவர்களுக்கு உணவளிக்க முடியாது. நீரளிக்க முடியாது. மெய்யுலகில் உறவாட முடியாது. அவர்களுடனான அனைத்து தொடர்பாடல்களும் மெய் நிகர் உலகில் தான் அரங்கேற முடியும்.

இது இவ்வாறு இருக்க, நாம் மற்றொரு ஊடக உலகத்திற்கு சென்று வருவோம். இந்த தலைப்பின் முக்கிய அங்கங்கள், பனை ஓலைச்சுவடி, கல்வெட்டு மற்றும் செப்பெடு. தட்டையான பார்வையில் பல ஊடக அறிஞர்கள் ஊடகங்கள் யாவை என்ற கேள்விக்கு அளித்த வரையறைகளை மறுதலித்து அறிவார்ந்த வரையறைகளை தந்தவர்கள் சிலர். அவர்களில் நான் மிகவும் மதிப்பது, ஜேம்ஸ் காரி (1989), பெரடரிக் கிட்லர் (1990) மற்றும் மார்ல் மக்லூகன் (1964).

பனையும், கருங்கல்லும், திணை வாழ்வியலும் - அனைத்தும் அனைத்திற்கே, யாவும் யாவற்கே, எல்லாமும் இயற்கைதான். எல்லாம் சமம் தான். இயற்கை வழியில் செல்லும் வாழ்வியல் தான் சிறந்தது என்பது தான் சங்க கால தொடர்பியல் மரபு. இதன் கருத்தியல் களம் தான் கணியன் பூங்குன்றன் எனும் தமிழ் பேரறிஞரின் பாடல். பாடல் அல்ல மாபெரும் அறிவுத் தளம்.

யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறம்: 192)

பனை ஓலை, கல்வெட்டு, செப்பேடு, பாறை, குகைச் சுவர் இவற்றின்

ஊடகத் தன்மையை அறிய அவற்றின் பொருள் தன்மை மற்றும் பொருளகத் தன்மையை அறிய முற்பட வேண்டும். இங்கு சுருக்கமாக அவற்றை விளக்குகிறேன்.

பனை ஓலைச் சுவடியின் பொருள் தன்மையும் பொருளகமும் - உயிர்ப் பொருள், பயன்பாட்டுப் பொருள், ஏகத்தன்மை, அனைத்தும் அனைத்துயூர்களுக்கே. மனித அறிவாற்றலின் படிம வெளிப்பாட்டு தளம். படியாக்கம், மீள் படியாக்கம், மீள் மீள் படியாக்கம்...

கல்வெட்டின் பொருள் தன்மையும் பொருளகமும் - தொல் ஆதி நிலை, ஆதியையும் இறுதியையும் உள்ளடக்கிய நிலைத்த தன்மை, மனித நிலையாமையின் படிம வெளிப்பாட்டு தளம். மீள் கல்வெட்டு. பழங்கற்படி.

செப்பேட்டின் பொருள் தன்மையும் பொருளகமும் - நிலச் சமூக மூலதனம் பேரரசுகளால் வளர்த்தெடுக்கப்படும் பொழுதும், பேரரசுகள் தமது வளங்களை வைதீகத்திற்கு மங்களங்களாக தாரை வார்க்கும் பொழுதும், மெய் கீர்த்திகள் வளர்த்தெடுக்கப்பட்ட பொழுதும், வளர்ந்தவை செப்பேடுகள். போலி செப்பேடுகள். துல்யம்.

கிட்லரின் தொடர்பியல் உரைக் கோவையின் (1990) பயன்பாட்டு கூறுகள்: உருவாக்கம், சேமிப்பு, வாசிப்பு. இவை எவ்வாறு பனை ஓலைச் சுவடியின் தொடர்பியல் தளத்திற்கு பொருந்தி வரும்? சம கால சமூக ஊடக தளங்களிலிருந்து எவ்வாறு பனை ஓலைச் சுவடிசார் தொடர்பியல் தளங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன? என்ற கேள்விகளை நாம் எழுப்ப வேண்டும்.

தொல் தமிழர் ஊடகங்களின் முக்கிய அம்சங்கள் - மனித இடைமுகம் (interface), மனித உள்ளடக்க உள்ளிடு மற்றும் மீட்பு, இயற்கைசார் ஊடக சேமிப்பு, எதிர்கால பயன்பாடு/இணக்கம்.

சம கால சமூக மற்றும் வழமையான ஊடகங்களின் முக்கிய அம்சங்கள் - தொழில் நுட்ப இடைமுகம் (technological interface), தொழில் நுட்ப உள்ளடக்க உள்ளிடு மற்றும் மீட்பு (technological input and retrieval), தொழில் நுட்ப சார் சேமிப்பு (technological storage), எதிர்கால தொழில் நுட்ப இணக்கமற்றது, பயன்பாடற்றது (non-future proof).

ஹெரால்டு இன்னிஸின் (1950,1951) பார்வையில் ஊடகங்கள் அவை சார்ந்த நாகரீகங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியில் தங்களது கால சார்பு மற்றும் வெளி சார்பு தனி தன்மைகளால் பங்களிப்பு செய்பவை. சோழர்களின் எழுச்சியிலும் வீழ்ச்சியுலும் சோழர்கால கால சார்பு மற்றும் வெளி சார்பு ஊடகங்களின் பங்களிப்பு உண்டு. கால சார்பு ஊடகங்கள் இடம் பெயரா. வெளி சார் ஊடகங்கள் இடம் பெயரும், வெளிகளை கடக்கும் (பனை ஓலைச்சுவடி, செப்பேடுகள்). கால சார் ஊடகங்கள்,

காலத்தை வெல்லும் அளவில் கட்டமைக்கப்பட்டவை (சிற்பங்கள், ஐம்பொன் திருமேனிகள், கல்வெட்டுகள், கற்றாளிகள்).

நாம் ஏன் பனை ஓலைச்சுவடிகளை எண்ணியல் முறைமைகளை சார்ந்து மட்டும் படியெடுக்கக் கூடாது?

நமது முன்னோர்கள் எதிர்கால தொழில் நூட்பங்கள் இணக்கமற்றது, பயன்பாடற்றவை என்பதை அத்தொழில் நூட்பங்களின் வரவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உணர்ந்ததால், கல்வெட்டு வேறு ஊடகம், பனை ஓலை வேறு ஊடகம், செப்பேடு வேறு ஊடகம் என்ற புரிதல் இருந்ததால், சில உள்ளடக்க வகையாறாக்களை தவிர்த்து, பனை ஒலை சுவடிகளிலிருந்து உள்ளடக்கங்கள் மற்ற இரண்டு தளங்களுக்கு பயணிக்கவில்லை. அவர்கள் பனை ஓலை சுவடிகளை மீள் படியாக்கம், மீள் மீள் படியாக்கம். என்ற நிலைகளுக்கு கடத்திய காரணத்தினால், அதன் காலம் சார் தன்மை, வெளி சார் தன்மை மாறவில்லை. நமக்கு பனை ஓலை சுவடிகளில் கிடைக்க வேண்டிய இலக்கியங்கள் மற்றும் மருத்துவ நூல்கள், பனை ஓலை சுவடிகளில் கிடைக்கின்றன. கல்வெட்டிலோ, செப்பேடுகளிலோ கிடைக்க வாய்பில்லை.

முன்பு குறிப்பிட்ட தொழில் நுட்ப இடைமுகம் (technological interface)> தொழில் நுட்ப உள்ளடக்க உள்ளிடு மற்றும் மீட்பு (technological input and retrieval), தொழில் நூட்ப சார் சேமிப்பு (technological storage), தொடர் நிலையற்ற நிலையில் மாற கூடியது. 60களில் இருந்த தொழில் நுட்ப இடைமுகம் (technological interface), தொழில் நுட்ப உள்ளடக்க உள்ளிடு மற்றும் மீட்பு (technological input and retrieval), தொழில் நுட்ப சார் சேமிப்பு (technological storage) நேற்று இல்லை. இன்று புழக்கத்தில் இருக்கும் எண்ணியல் தொழில் நுட்ப உள்ளடக்க உள்ளிடு மற்றும் மீட்பு (technological input and retrieval), தொழில் நுட்ப சார் சேமிப்பு (technological storage) நாளை, எதிர்காலத்தில் இருக்காது. தொடர்ந்து நாம் மாறி வரும் தொழில் நுட்ப தளங்களில் அவற்றை மறு உள்ளீடு செய்ய வேண்டும்.

மறுபடியும், நாம் பனை ஓலை, கல் மற்றும் செப்பேடுகளில் உள்ளீடு செய்ய கற்றுக் கொடுக்க வேண்டும் இன்றைய இளையோருக்கு. மாமல்லபுரம் சிற்பங்களை நாம் எவ்வாறு காணோளி காட்சிகளாக மீள் படியாக்கம் செய்ய முடியாதோ, ஓலைச் சுவடிகளையும் மீள் படியாக்கம் செய்ய முடியாது, ஓலைச் சுவடியற்ற எண்ணியல் ஊடக தொழில் தளங்களில்.

எண்ணியல் ஆவணப்படுத்துதலுக்கு செலவிடும் தொகையை, மேற்குறிப்பிட்ட பனை ஓலை, கல் மற்றும் செப்பேடுகளில் உள்ளீடு செய்ய கற்றுக் கொடுக்கும் பயிலரங்களுக்கு செலவிடலாம். அடுத்த 100-300 வருடங்களில், இன்று நாம் பாதுகாத்து வைத்திருக்கும் பனை ஓலைச்சுவடிகள் இயற்கை மரணம் அடையலாம். செப்பேடுகள் நம்முடன்

இருக்கும், கல்வெட்டுகளும் இருக்கும், பனை ஓலை சுவடிகள் இருக்காது. பனை மரங்களும் வேகமாக தமிழ் மண்ணிலிருந்து அன்னியப்பட்டு வரும் காலத்தில், நாம் அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்து பனை மர வெட்டுதலை தடுக்க வேண்டும். பனை மரத்தை பண்பாட்டு கருவூலமாக அறிவிக்க செய்திட வேண்டும். தமிழர்களின் தொல் ஓவியங்கள், கல்வெட்டுகள் மற்றும் சிற்பங்கள் இருக்கும் குன்றுகளை காத்திட அரசை நாம் தொடர்ந்து அணுக வேண்டும்.

நன்றி.

## ஆதார நூல் பட்டியல்


1) Carey, James (1989), *Communication as Culture,* Unwin Hyman.
2) Garland, David (2014), "What is a "History of the Present"? Foucault's Genealogies and their Critical Preconditions", *Discipline and Punish,* Vol. 16(4) 365–384.
3) Horkheimer, Max and Adorno, Theodor (1944/1993), *The Dialectic of Enlightenment,* Continuum.
4) Innis, Harold. (1950), *Empire and Communications,*Oxford University Press.
5) Innis, Harold. (1951), *The Bias of Communication*, University of Toronto Press.
6) Kittler, Friedrich (1990), *Discourse Networks 1800/1900.*Stanford University Press.
7) Marx, Karl and Engels, Frederick (1848), *Manifesto of the Communist Party*, Available at "https://www.marxists.org/archive/marx/works/download/pdf/Manifesto.pdf"https://www.marxists.org/archive/marx/works/download/pdf/Manifesto.pdf
8) McLuhan, Marshall (1964)*, Understanding Media:The Extensions of Man,* McGraw Hill.



## பேராசிரியர் கோ.இரவீந்திரன்

முனைவர் கோபாலன் இரவீந்திரன் சென்னைப் பல்கலைக்கழக இதழியல் மற்றும் தொடர்பியல் துறையில் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவராக பணியாற்றுகிறார். இதற்கு முன் ஜப்பான் நாட்டின் நகோயா பல்கலைக்கழகத்திலும், மலேசியா நாட்டின் அறிவியல் பல்கலைக்கழகத்திலும், தமிழ் நாட்டின் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றியுள்ளார். 44 ஆய்வு கட்டுரைகள் மற்றும் நூல் அத்தியாயங்கள் இவரால் படைக்கப்பட்டுள்ளன. மாற்றத்திற்கான கோட்பாடுகளும் தத்துவங்களும் இதழியல் மற்றும் தொடர்பியல் துறையின் அரசியல் பொருளா தாரம், தொடர்பியலின் வெளித்தன்மையும், பொருளகமும், திரைப் பண்பாடு கள், புலம் பெயர் மக்கள் பண்பாடுகள் மற்றும் எண்ணியல் பண்பாடுகள் சார்ந்து இவரது ஆய்வுகளும், கற்றல் கற்பித்தல் தளங்களும் அமைகின்றன.

## Prof (Dr).G.Ravindran

**Dr.**Gopalan Ravindran has been working as a Professor and Head, Dept.of Journalism and Communication, University of Madras, since 2008. His previous positions include: Visiting Fellow, Graduate School of International Development, Nagoya University, Japan; Lecturer, School of Communication, *Universiti Sains Malaysia,* Penang; Reader and Head, Dept.of Communication, Manonmaniam Sundaranar University,Thirunelveli, India.

Evergreen Printers, Jaffna. T.P. 021 221 989